# கோட்டையில் மரணித்த புலிகளுக்கு இன்று அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளால் கடந்த 5-8-90 அன்று யாழ் கோட்டைமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் முன்னின்று போராடி வீர மரணத்தை தழுவிக்கொண்ட வேங்கைகளின் ஆறு உடல்கள் நேற்று விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டது. இவர்களுக்கு இறுதி அஞ்சலியும் தகனக்கிரிகையும் இன்று நடைபெற உள்ளது.

கடந்த 370 ஆண்டுகளாக எம் மண்ணில் இருந்த பகைவனின் பாசறையாகவும், அடிமைச்சின்னங்களில்ஒன்றுமான யாழ். கோட்டையை கைப்பற்றுவதற்காககடந்த 5-8-90 அன்று விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட அதி உக்கிர அதிரடித் தாக்குதலில் முன்நின்றுவீரமுடன்போராடி களத்தில் வீர மரணமடைந்த வேங்கைகளில் அறுவரின் உடல்கள் நேற்று முன்தினம் புலிகளால் கோட்டை கைப்பற்றியதையடுத்து நேற்று மீட்கப்பட்டது.

இவர்களின் புகழுடம்புகள் அடங்கிய பேழைகள் இன்று காலை 10.00 மணிதொடக்கம் யாழ். பல்கலைக்கழக

(4ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 12 உ வெள்ளிக்கிழமை (28 - 09 - 1990) ஹிஜ்ரி 1411 ரபி. அப். 08 ஓசை 223

## வெளிநாட்டவருக்கான உணவு விநியோகம் நிறுத்தம்

ஈராக் - குவைத்தில் தங்கியுள்ள வெளிநாட்டவருக்கு எதிர்வரும் திங்கட்கிழமைக்குப் பின்னர் உணவுக்கூப்பன் வழங்கப்படாது எனவும் ஈராக் அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஐ. நாவின் ஈராக் மீதான விமானப் பொருளாதாரத்தடைக்கு எதிராகவே இந்த நடவடிக்கைகளை ஈராக் மேற்கொண்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# உதயன் - சஞ்சீவி பத்திரிகைப் பணிமனை மீது விமானக் குண்டு வீச்சு

## ஒருவர் பலி; மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

**சிறிலங்கா விமானப்படை விமானம் ஒன்று நேற்று நண்பகல் உதயன்-சஞ்சீவி பத்திரிகைக் காரியாலயம் மீது மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். மூவர் படுகாயம் அடைந்தனர். காரியாலயமும் சேதமடைந்தது.**

நேற்று நண்பகல் ஒருமணியளவில் கைலாச பிள்ளையார் கோவிற் பகுதியை வட்டமிட்ட சிறிலங்கா விமானப்படை விமானங்கள் இரண்டில் ஒன்று அப்பகுதியில், நாவலர் வீதியில் அமைந்திருந்த உதயன்-சஞ்சீவி பத்திரிகைக் காரியாலயம் மீது குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டது விமானத்திலிருந்து மூன்று குண்டுகள் காரியாலயத்தை நோக்கி வீசப்பட்டன.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரமரணம்

(முல்லைத்தீவு)

மாங்குளம் இராணுவ முகாமைச் சுற்றி நேற்று சிறிலங்காவின் பொம்மர்களும், கெலிகொப்ரர்களும் தாக்குதல் நடத்தியதில் அப்பகுதியில்

(4ஆம் பக்கம் பார்க்சு)

## யாழ் நகரில் மக்கள் வெள்ளம் கோட்டையில்புலிக்கொடிபார்ப்பதற்கு

(யாழ்ப்பாணம்)

ஜூன் மாதம் பதினொராம் திகதி கோட்டை முகாமில் இருந்து ஷெல்குண்டுகள் ஏவப்பட்டதைத் தொடர்ந்து வெறிச்சோடிய யாழ். நகர் மீண்டும் புதிய களை கட்டத் தொடங்கியது.

மக்கள் நகருக்குள் காலையில் இருந்து மாலை வரை குடா நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து சாரைசாரையாக வந்தனர்.

### கொடி பறந்ததை மக்கள் ரார்த்தனர்

முன்பு சத்திரச் சந்தியில் கோட்டை முகாமிலிருந்து வரும் வேட்டுக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்குப் புலிகளால் பரல்கள், மண்மூடைகள்கொண்டு அமைக்கப்பட்ட அரண்களின் மீது ஏறி நின்று கோட்டையின் உச்சியில் அசைந்தாடும் புலிக்கொடியை மக்கள் மகிழ்ச்சியுடன் பார்த்து ரசித்தனர்.

### ஷெல் தாக்குதல்

நேற்றும் மண்டைதீவுக்கடற்பரப்பிலிருந்து ஷெல் தாக்குதல்கள் இடைவிட்டு மேற்கொள்ளப்பட்டன. இந்த ஷெல்கள் கோட்டை பிரதான வாசலை அண்டிய பகுதிகளிலேயே விழுந்து வெடித்திருந்

( 4ஆம் பக்கம் பார்க்க)

## கோண்டாவிலில் விமானக் குண்டுவீச்சு; வீடுகள் சேதம்

இரண்டு சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் நேற்று நண்பகல் கோண்டாவில் பகுதியில் தாக்குதல் நடத்தின.

இந்தத் தாக்குதலால் பல வீடுகள், வாகனங்கள் சேதமடைந்துள்ளன. கோண்டாவில் பலாலி வீதியில் உள்ள விக்னேஸ், பவளக்கொடி என்பவர்களது இரண்டு வீடுகள் பலத்தசேதம் அடைந்துள்ளன. மேலும் இந்த வீடுகளில் நின்ற வாகனம் ஒன்றும் சேதமடைந்துள்ளது.

## நகரைவிட்டு வெளியேறும் மக்களுக்குக் கடும் சோதனை

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதி செல்லும் பொதுமக்கள் அனைவரும் இராணுவக் காவல்அரண் முன் நிறுத்தி வைக்கப்பட்டு, பல மணி நேரங்களின் பின்னர் தான் வெளியே விடப்படுகின்றனர்.

இராணுவ காவல் அரண் முன் தினமும் இது நிகழ்ந்து வருகிறது.

கடந்த 23 ஆம் திகதி இவ்வாறு சொரிக்கும் வெயிலில் வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்ட பொதுமக்கள் அனைவரும் இராணுவத்தினரால் வீடியோவில் படம் பிடிக்கப்பட்ட பின்னரே வெளியே விடப்பட்டனர். (தி)

## பருத்தித்துறை களஞ்சியம் துரித கதியில் திருத்தப்படுகிறது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை துறைமுகத்தில் உள்ள பழுதடைந்திருந்த களஞ்சியசாலை தற்போது துரித கதியில் திருத்தி அமைக்கப்பட்டுவருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை இக்களஞ்சியசாலையைப் பார்வையிட்ட யாழ். அரசாங்க அதிபர் திரு.அன்ரன் அல்பிரட் இதற்கான பணிப்புரையை வழங்கினார். இத்திருத்த வேலையை பருத்தித்துறை பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம் பொறுப்பேற்று மிகவிரைவாக

( 4 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் ஒரே வழி!

### -ஐ. கே. குஜ்ரால்

(நியுயோர்க்)

இலங்கை இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முடியாது என்றும், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றக்கூடிய அரசியல் தீர்வொன்றின் மூலம்தான் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் கூறியிருக்கிறார்.

இலங்கை மக்கள் அனைவரின் ஜனநாயக உரிமைகளையும், மனித உரிமைகளையும் பாதுகாக்கும் அடிப்படையில் தான் இத்தகைய தீர்வுகளைக் காண முடியும் என்றும் அவர் நியுயோர்க்கில் ஐ. நா. சபையின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

## முல்லையில் ஊர்கள் தோறும் திலீபனின் நினைவஞ்சலிகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் திலீபனின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சிகள் கிராமப் புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் ஊர்வலங்கள், அடையாள உண்ணாவிரதங்கள், மரம்நாட்டு வைபவங்களுடன் மிகவும் உணர்ச்சிபூர்வமாக நடைபெற்றுள்ளன.

மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வீதிகள், சந்திகள், பொது இடங்கள், வீட்டு வாசல்கள் என்பவற்றில் திலீபனின் உருவப்படங்களை சிறப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பட்டப்படிப்புக்கள் கல்லூரி அறிவித்தல்

கீழ்க்காணும் பயிற்சி நெறியை மேற்கொள்ளும் மாணவர்கள் 30-09-1990 ஞாயிறு காலை 9.00 மணிக்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

1. கலை முதற் தேர்வு (G. A. Q) 1989 ஆம் ஆண்டு மாணவர்கள்
2. கலைமாணி (B. A) 1987 ,, ,, ,,
3. கலை முதற் தேர்வு (G. A. Q) 1990 ,, ,, ,,
4. விஞ்ஞான முதற் தேர்வு (G. S. Q) 1989 ,, ,, ,,
5. விஞ்ஞான முதற் தேர்வு (G. S. Q) 1990 ,, ,, ,,
6. விஞ்ஞானமாணி (B. Sc) 1987 ,, ,, ,,

இயக்குநர்
பட்டப்படிப்புக்கள் கல்லூரி,
(உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அருகாமை)
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(B - 1435)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

வீர ஜனனம் 25 - 05 - 1971



வீர மரணம் 27 - 08 - 1990

## இளம்புலி சாம்சன்
## (செல்லப்பா குலேந்திரன்)

மண்டைதீவில் இருந்து மேற்கொள்ளப்பட்ட 'ஷெல்' தாக்குதலில் வீரமரணமடைந்தார்.

(B/1433)

# லெப். கேணல் தியாகி திலீபனின் 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தியாகத்தின் திலகமோர் திலீபன் என்றாற்
சிந்திப்போர் காரணத்தை தீர்க்கமாக
களத்திலே பலியானார் வீரரெல்லாம்
கருணைக்கே பலியானான் தியாகச் செம்மல்
உள்ளத்தின் உறுதியாற் திலீபன் சாத்த
உண்ணாநோன் புள்ளத்தை உலுக்கக் கண்டோம்
தளபதியின் பாராட்டை இறுதிமூச்சிற்
தன்காதாற் கேட்டுயிரை நீத்த வீரன்
குண்டாலே எதிரிகளை மாய்க்கவில்லை
குணத்தாலே எதிரிகளை வீழ்த்தி விட்டான்
அற்புதமாய் திகழ்ந்திட்ட தியாகத்தாலே
ஆண்டாண்டாய் அவன்புகழும் நிலைக்குந்தானே!

சிற்றூரவை,
புங்குடுதீவு.

(R.666)

# மானிப்பாயில் திலீபனுக்கு அஞ்சலி

(மானிப்பாய்)

திலீபனின் நினைவஞ்சலிக்காக திலீபன் ஊர்தி கடந்த சில தினங்களாக சிற்றூரவை தோறும் எடுத்துச் செல்லப்பட்டது. மிகப்பெரிய திலீபனின் படத்தை அலங்கரித்து கிராமம் கிராமமாக எடுத்துச் செல்லப்பட்டது.

மக்கள் முன்னணி மானிப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் திரு. சங்கர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். மானிப்பாய் இந்துக் கல்லூரியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட திலீபனின் ஊர்தி சில நாட்களாக சுதுமலை, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சண்டிலிப்பாய், மாசியப்பிட்டி ஆகிய சிற்றூரவைகள் தோறும் கொண்டு செல்லப்பட்டது. ஒவ்வொரு சிற்றூரவைகளும் திலீபனின் ஞாபகார்த்தமாகப் பொதுக் கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தன. ஊர்தி பவனி முடிவில் சண்டிலிப்பாயில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றும் நடாத்தப்பட்டது.

சிற்றூரவைத் தலைவர்கள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் இதில் கலந்துகொண்டு பேசினார்கள். ஊர்திசென்ற இடமெல்லாம் மக்கள் திரண்டு திலீபனுக்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலியும் செலுத்தினார்கள்.

# அரிசி வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலையில் இருந்து இடம் பெயர்ந்து வந்த அகதிகள் தாம் பட்டினியால் கஷ்டப்படுவதாகவும், ஒரு நேரம் தானும் உண்ண உணவு இல்லாமல் மூன்று வேளையும் பீற்றூட் கிழங்கை அவித்து உண்பதாகவும் நீர்வேலி பிரதேசப் பொறுப்பாளரிடம் முறையிட்டனர். அவர்களின் நிலைமையை கேட்டறிந்த நீர்வேலிப் பொறுப்பாளர் விபரங்களை எழுதி கோண்டாவில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பியிருந்தார். அவர்களின் நிலைமையை நன்றாக விசாரித்து அறிந்த யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் ஒருமூடை அரிசியை வழங்கினார். இதனால் அந்த இடம் பெயர்ந்த மக்கள் அக மகிழ்ந்தனர்.

# அறிவித்தல்

ராஜு ஸ்ரோர்ஸ் யாழ் கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த ஒரு கிளை நல்லூர் கோயில் முன்பாக இயங்குகின்றது. வேறு எந்த இடத்திலும் இயங்கவில்லை. மீண்டும் யாழ்நகரில் இயங்கும் போது பத்திரிகை மூலம் வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

(R-667)

# வன்னி மாவட்டத்தின் இன்றைய நிலை

## சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கையில் இறந்த பொதுமக்களின் விபரம்

| | | |
|---|---|---|
| 01. திருமதி அந்தோனிப்பிள்ளை | 15. 06. 90 | சூசைப்பிள்ளையார் குளம் |
| 02. இராஜேஸ்வரி | 15. 06. 09 | சூசைப்பிள்ளையார் குளம் |
| 03. டேவிட்ஹென்றி | 17. 06. 90 | பண்டாரிக்குளம் |
| 04. சிவலிங்கம் | 22. 06. 90 | மாங்குளம் |
| 05. மரியாயி | 22. 06. 90 | ,, |
| 06. சுப்பன் | 22. 06. 90 | ,, |
| 07. ஐயாவு | 22. 06. 90 | வேப்பங்குளம் |
| 08. ஆ. யோகநாதன் விளாத்திக்குளம் | 04. 08. 90 | ஓமந்தை |
| 09. க. கனகராசா பறங்கியாறு | 04. 08, 09 | ,, |
| 10. ஆ. தியாகராஜா பறங்கியாறு | 07. 08. 90 | கல்மடு 1ம் படிவம் அகதிகள் பாடசாலை |
| 11. ஆ. வீரம்மா பறங்கியாறு | 07. 08. 90 | ,, |
| 12. த. ஜீவகாந்தி பறங்கியாறு | 07. 08, 90 | ,, |
| 13. த. வீராஜி பறங்கியாறு | 07. 08. 90 | ,, |
| 14. விசாலாட்சி மாங்குளம் | 07. 08. 90 | செங்கலப்பிட்டி அகதிகள் பாடசாலை |
| 15. தருமலிங்கம் கணேசபுரம் | 08. 08. 90 | கோவிற்குளம் |
| 16. சகாதேவன் மரக்காரம் பிள்ளை | 17. 08. 90 | பூந்தோட்டம் |
| 17. நடராசா நொச்சிக்குளம் | 18. 08. 90 | செட்டிக்குளம் |
| 18. தி. இராஜலிங்கம் 1ம் பாம் செட்டிகுளம் | 23. 08. 90 | ,, |
| 19. மு ராஜா வைத்தியசாலை வீதி மாத்தளை | 14. 06. 90 | கிளிநொச்சி |
| 20. ராம்குமார் ராஜா பதுளை | 14. 06. 90 | கிளி/இராணுவ முகாம்முன் |
| 21. ச. சௌதர்ராஜா செல்லையா கமம் D-3 பரந்தன் | 24. 06. 60 | நெல்குதம் முன்பாக |
| 22. சு. சுப்பிரமணியம் 255 றெட்பானா விசுவமடு | 24. 06. 90 | ,, |
| 23. செ. அரசப்பன் ஏகாம்பர் கமம் D-3 பன்னங்கண்டி | 24. 06. 90 | தாபற் கந்தோர் அருகாமை |
| 24. சி. இராசு சிவன் வீதி மாயவனடி | 24. 06. 90 | கிளிநொச்சி |
| 25, இ. சுபாஜினி நாகேந்திரபுரம் புளியம்பொக்கணை | 30. 06. 90 | புளியம்பொக்கணை |
| 26. சி. சுந்தரராஜா நெத்தலி ஆற்றங்கரை | 30. 06.90 | பாடசாலை தர்மபுரம் |
| 27. க. சிவானந்தம் புதியகொலனி மாங்குளம் | 12-07-90 | மாங்குளம் |
| 28. மு. நாகராஜா இந்துபுரம் முறுகண்டி | 13-07-90 | வீட்டில் |
| 29. சி. முத்துராஜா D-5 பாம்புகமம் பரந்தன் | 19-07-90 | பரந்தன் |
| 30. சி. சிவலிங்கம் 11 - தர்மபுரம் | 21-07-90 | 4 ஆம் யூனிற் லூக்காஸ் தேவாலயம் |
| 31. வே கிருஷ்ணன் D-4 கிளிநொச்சி | 25-07-90 | 6 ஆம் வாய்க்கால் |
| 32. மா. கிருஷ்ணகுமார் D-4 அம்பாகடை கிளிநொச்சி | ,, | அம்பிகா எப்ரோஷ் கமம் கிளிநொச்சி |
| 33. ப. வேலாயுதம் கச்சேரியடி கிளிநொச்சி | 27-07-90 | கச்சேரி |
| 34 கா. சுப்பையா D-5 செல்லத்துரை கமம் கிளிநொச்சி | ,, | காம் அடி கிளிநொச்சி |
| 35. செ. தயாபாலன் 301 ஆம் யூனிற் தர்மபுரம் | 30-07-90 | தர்மபுரம்பாடசாலை |
| 36. கி. பாரத்தீபன் உதயநகர், கிளிநொச்சி | 01-06-90 | ஆனந்தபுரம் |
| 37. த. சிவலோகநாதன் 346 இராமநாதபுரம் | 20-08-90 | கொம்படி |
| 38. அ. சபாரத்தினம் வவுனியா | 12-07-90 | வவுனியா |
| 39. கே. பிறேம்குமார் வட்டுவாகன் | 03-08-90 | சாம்பல்தீவு |
| 40. ரி. பொன்னுத்துரை சாம்பல்தீவு | ,, | ,, |
| 41. லட்சுமி அளம்பில் | ,, | அளம்பில் |
| 42. டி. காளியம்மா உடப்பு | ,, | ,, |
| 43. கே. நல்லராத்தை உடப்பு | ,, | ,, |
| 44. த. இராசலட்சுமி உடப்பு | ,, | ,, |
| 45. மாத்தையா திருமலை | ,, | ,, |
| 46. த. தவராசா சிலாவத்தை | ,, | சிலாவத்தை |
| 47. எஸ். மாப்பிள்ளை அளம்பில் | ,, | அளம்பில் |

(தொடரும்)

## சிந்தனைக்கு

*எறும்புகள் சிறந்த குடிகள்; தங்கள் இறைவனையே தலையாயதாகப் போற்றுகின்றன அவை*

- ஹென்றிடேவிட்தோரோ


ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 28-09-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


# குடியேற்றவாசிகளும் ஆக்கிரமிப்பாளர்களே

திருமலை மாவட்டம் சிறிலங்கா அரசாங்கத்தால் திட்டமிட்டு இராணுவ மயமாக்கப்படுவதோடு, சிங்கள மயமும் ஆக்கப்பட்டு வருகின்றது.

1990 க்கு முன் அறுபது அளவில் இருந்த இராணுவ முகாம்கள் இன்று தொண்ணூறையும் தாண்டிவிட்டது. அதேவேளை பல்லாயிரக்கணக்கான தமிழர் சொந்த மண்ணில் இருந்து விரட்டப்பட்டதோடு, ஆயிரக் கணக்கில் தமிழர்கள் படுகொலையும் செய்யப்பட்டுள்ளனர். மறுவளமாக ஆயிரக்கணக்கில் ஆயுதம் தாங்கிய சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இலங்கையை விட்டு ஆங்கிலேயர் வெளியேறிய காலத்திலிருந்து தமிழர்பகுதியில் சிங்கள அரசாங்கங்கள் திட்டமிட்டு குடியேற்றங்களை நிறுவி வந்தன. இதனால் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இன விகிதாசாரமே மாறிவிட்டது.

கிழக்கில் 75 வீதமாக இருந்த தமிழர்கள் இன்று 40 வீதமாகக் குறைந்துவிட்டனர். அதிலும் குறிப்பாக திருமலை மாவட்டத்தில் பெரும்பான்மையினராக இருந்தவர்கள் 33 வீதத்திற்குக் குறைந்து விட்டனர். (தற்பொழுது இன்னும் குறைவாகவே இருக்கும்)

திட்டமிட்ட குடியேற்றத்தால் ஆக்கிரமித்த மண்ணை தற்பொழுது தமது தாயகம் எனச் சொல்ல சிங்களவர்கள் முற்படுகின்றார்கள். உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி அண்மையில் கிழக்கு மாகாணத்தை ''மூன்று இனங்களின்தாயகம்'' எனக்குறிப்பிட்டிருந்தார்.

கிழக்கு மாகாணத்தில் இன்று குடியேற்றப்படுபவர்கள் சாதாரண சிங்களப் பொதுமக்களும் அல்ல. இது அவர்களின் தாயகமும் அல்ல.

இவர்கள் சிங்கள அரசாங்கத்தால் நன்கு திட்டமிட்டு, ஆயுதப்பயிற்சி அளிக்கப்பட்டு ஆயுதமும் வழங்கப்பட்டு, வாழ்வதற்குரிய சகல வசதிகளும் இலவசமாகச் செய்து கொடுக்கப்பட்டு ஆயுதப்படையினரின் பாதுகாப்புடன் குடியேற்றப்படுபவர்கள், குடியேறுபவர்கள்.

இவர்கள் இன்று தமிழரைத் தாயகத்தில் இருந்து விரட்டுவதிலும், படுகொலை செய்வதிலும், சொத்துக் களைச் சூறையாடுவதிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள். ஆயுதம் தாங்கிய இக்குடியேற்றவாசிகளை அப்பாவிச் சிங்களவர்கள் என்று குறிப்பிடுவது எந்தவிதத்திலும் பொருத்தப்பாடு உடையதல்ல.

தென்ஆபிரிக்காவில், அந்த மண்ணுக்குரிய கறுப்பின மக்களை அடக்கி ஒடுக்கி, வந்தேறு குடிகளான வெள்ளையர்கள் தென்ஆபிரிக்காவளங்களை அனுபவித்து வருகின்றார்கள். இன்று தென் ஆபிரிக்க கறுப்பு இன மக்கள் இன ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வளமற்ற அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டநிலங்களில் தடைமுகாமில் வாழ்வதுபோன்று வாழ்கின்றார்கள்.

இதேபோன்றதொரு நிலையையே இன்று கிழக்கில் சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்படுத்தி வருகின்றது. வளமான நீர்ப்பாசன வசதியுள்ள அல்லது நீர்ப்பாசனவசதி செய்யப்படுகின்ற நிலங்களை சிங்களக் குடியேற்றவாசிகளுக்கு ஒதுக்குகின்றது. அரச தொழிற் துறையில் சிங்களவருக்கு முதலிடம் கொடுக்கின்றது.

அதேவேளை தமிழ் கிராமங்களில் இருந்து தமிழர்கள் விரட்டப்படுகின்றார்கள். அகதி முகாம்கள் என்ற பேரில் தடுப்பு முகாம்களில் அடைக்கப்படுகின்றார்கள். 'சிங்கள குடியேற்றவாசிகள் தமிழர் விதைத்த பயிரை அறுவடை செய்கின்றார்கள்.

இந்நிலையில் ஆயுதம்தாங்கிய சிங்களக் குடியேற்ற வாசிகளை எவ்வாறு அப்பாவிச் சிங்களவர் என்று கொள்வது? அவர்களும் ஆக்கிரமிப்பாளர்களே. அதே வேளை இவர்கள் அடக்குமுறை இராணுவத்தைவிடவும் பயங்கரமானவர்கள்.

எமது மண்ணில் தமது பொருளாதாரத்தை வளர்த்துக் கொண்டு எம்மை அழிக்கப்பாடுபடுபவர்கள். அதாவது இந்த மண்ணின் வளத்தில் வாழ்ந்துகொண்டு மண்ணின் மைந்தர்களை அழிப்பவர்கள்.

சிறிலங்கா இராணுவம் எவ்வாறு எமது மண்ணை ஆக்கிரமிக்கும் சக்தியாக உள்ளதோ, அதேபோன்று அல்லது அதைவிட மோசமான ஆக்கிரமிப்பாளர்கள் ஆயுதம் தாங்கிய குடியேற்றவாசிகள்.

எமது மண்ணின் விடுதலைக்கு எவ்வாறு அந்நிய இராணுவம் வெளியேற்றப்பட வேண்டுமோ அதேபோன்று ஆயுதம் தாங்கிய சிங்களக் குடியேற்றங்களும் வெளியேற்றப்பட வேண்டும். அப்பொழுதுதான் எமது மண் விடுதலை அடையும்.

# “கெரிலாக்களுக்கு எதிரான போரில் படைகள் எண்ணிக்கை முக்கியம்”

**சிறிலங்காவின் முன்னாள் பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி இலங்கையின் இரு யுத்தங்களை முன்நோக்கியும், பின்நோக்கியும் பார்வையிட்டுத் தமது கருத்துக்களை த ஐலண்ட் பத்திரிகையில் தெரிவிக்கிறார்.**

திரு. லலித் அத்துலத்முதலி தேசிய பந்தோபஸ்து அமைச்சராக மார்ச் 1984இல் பதவிஏற்ற சமயம், சிறிலங்கா இராணுவத்தின் அனைத்தும் பதவி வரிசைகளிலும் 11,000 சேனா வீரர்கள்தான் இருந்தார்கள். இக்காலப் பகுதியில் விமானப்படை, கடற்படை உட்பட ஆயுதப் படைகளின் மொத்த பலம் 16,500 ஆகும். சிறிலங்கா பொலிஸ் படைப் பிரிவில் 14, 500 பேர் இருந்தனர்.

ஜூன் 1990இல் பிரபாகரனின் தாக்குதல் படைகள் சிறிலங்காப் படைகள் மீது தாக்குவதென்று முடிவெடுத்த போது, முப்படைகளின் ஆளணிப் பலம் 60,000மாக இருந்தது. இராணுவத்தில் 46,000 பேரும், கடற்படை, விமானப்படை, கொமாண்டோஸ் என்பன சேர்ந்து மொத்தம் 14, 000 ஆயுததாரிகளைக் கொண்டதே முப்படைகளின் பலமாகும். பொலிஸ் படையில் விசேஷ அதிரடிப்படை (எஸ்.ரி.எஸ்.) ரிசேர்வ் படை உட்பட 40, 000 பேர் வரை உள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்போது பயிற்றுவிக்கப்படும் 15, 000 ஊர்காவற் படையினர், புதிய ஆறு காலாட் படைப் (5,000) பிரிவுகளையும் சேர்த்து நடப்பு வருடம் ஒக்டோபரில் பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கை 1, 20,000மாக உருவாகவுள்ளது.

**அனுகூலமான நிலை**

''கெரில்லாக்களுக்கு எதிரான சண்டையில் படைகளின் எண்ணிக்கை முக்கியமானது'' என்கிறார் அமைச்சர் அத்துலத் முதலி. விடுதலைப் புலிகளுடனான சண்டையில் தமது அனுபவத்தில் இப்படி ஒருபாடத்தினையே இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படையினர் கற்றுக் கொண்டனர். மரபு ரீதியான இராணுவம் பெரிய பிரதேசத்தைப் பாதுகாப்பது போல் அல்லாமல் கெரில்லாக்களுக்கு குறிப்பிட்ட இலக்குகளைத் தாக்கும் அனுகூலமான நிலை உண்டு. ''60,000 துருப்புக்களை யுத்தம் நடக்கும் பிரதேசத்தில் வைத்திருக்க முடியுமானால், தற்சமயம் எஞ்சியுள்ள 3, 000 விடுதலைப் புலிகளை அழித்தொழிக்க முடியும்'' — இப்படிக் கூறுகிறார் அத்துலத் முதலி.

ஒரு வகையில் பார்த்தால் களோ, அதையே இன்று விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கையாளும் தொழில் ரீதியான ஒரு போர்ச் சக்தி அமைச்சர் விஜேரட்ணாவின் இராணுவ இயந்திரம்.

யுத்த தளபாடங்கள், ஆயுதங்கள் நிலை எவ்வாறு? புலிகளுக்கு எதிராக ஒரு யுத்தத்தை மேற்கொண்டு, அந்த யுத்தத்தை வெல்லக் கூடிய வகையில் பொருத்தமான ஆயுதங்கள் உண்டா? 1987 ஜூலை சமாதான உடன்பாடு கைச்சாத்தாகியதும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா சிறிலங்கா இராணுவத்தை விஸ்தரித்து நவீனமயமாக்குவதற்குப் பதிலாக இந்தியாவையே அதிகமாக நம்பியிருந்தார் என்று அமைச்சர் அத்துலத் முதலி கருதுகிறார். இராணுவத்துக்கு இலேசான தாங்கிகள் தேவை என்பது ஒரு சிறப்பான விசயமாகும். இலேசான தாங்கிகளைத் தேடி வாங்கும்படி நான் 1987 பெப்ரவரியிலேயே இராணுவத்துக்குப் பச்சைவெளிச்சம் காட்டியிருந்தேன். எம்மிடம் சாலாடின் வகைபோன்ற கவசக் கார்கள் இருந்தன. அவ்வாகனங்களுக்கு கவசத்துடன் 75 எம். எம். துப்பாக்கிகளும் பொருத்தப்பட்டிருந்தன. ஆனால் இவற்றில் சுடும் சக்தியும், கவச பாதுகாப்பும் போதுமானதாக இருக்கவில்லை.

முன்னாள் பந்தோபஸ்து அமைச்சர் அத்துலத்முதலியை விட பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேயரெட்ணா நல்லதிஷ்டமுள்ளவர் சிறிலங்காப் படைகள் முன்புபோல் சம்பிரதாய பூர்வமான அணியாக அல்லாமல் தற்போது சண்டைக்கு நன்கு பழக்கப்பட்டுள்ளது என்பது பி.பி.ஸி, டைம் போன்ற பிற நாட்டு தொடர்பு சாதனங்களால் கூட ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அப்பாவிப் பொது மக்களை ஆவேசத்துடன் கொன்றழிக்கும்படையல்ல இன்றுள்ளது' ஜே. வி. பி க்கு எதிராக முன்பு எதைச் செய்தார்

(தொடரும்)

# சோவியத்திற்கு அமெரிக்கா இலஞ்சம் கொடுத்ததாக ஈராக் குற்றச்சாட்டு

(பாக்தாத்)

ஐ. நா. சபையின் வெளியுறவு அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் சோவியத் வெளியுறவு அமைச்சர் செவர்னாட்சே ஆற்றிய உரையை ஈராக் கண்டனம் செய்துள்ளது.

ஈராக்மீது பொருளாதாரத் தடையை நிறைவேற்றுவதற்கும், தேவை ஏற்படின் ஈராக் மீது இராணுவ நடவடிக்கையை எடுப்பதற்கும் சோவியத் யூனியன் ஆதரவு அளிக்கும் என அவ்வுரையின்போது செவர்னாட்சே குறிப்பிட்டிருந்தார்.

ஈராக் தனது கண்டனத்தில் அமெரிக்காவும், எண்ணெய் வளநாடுகளும் சோவியத் யூனியனுக்கு இலஞ்சம் கொடுத்திருப்பதாக ஈராக் குற்றம் சாட்டியுள்ளது.

அராபியருடன் நட்புக் கொள்வதில் சோவியத் யூனியனுக்கு அக்கறை இல்லையென்றால் அரபு உலகம் சோவியத் யூனியன் பற்றிக் கவலைப்படப் போவதில்லை எனவும் ஈராக் குற்றம் சாட்டியுள்ளது.

## காபூலில் குண்டு வெடிப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தூதரகங்கள் உள்ள வட்டாரத்தில் பெரிய குண்டு வெடிப்பு இடம் பெற்றது. உள்துறை அமைச்சகத்திற்கு சமீபமாக நடந்த இதே குண்டு வெடிப்புக்கு காரணம் ஏதும் தெரியவரவில்லை.

இது நடந்த சில நிமிடங்களுக்குள் அரசுப் படைவீரர்கள் விரைந்தனர். தொண்டர்களும், கவசவாகனங்களும்-தெருக்களில் காணப்பட்டன. பின்னர் நடந்த செய்தியாளர் மாநாட்டில் வெடிகுண்டு விபத்தெதுவும் நிகழவில்லை என்றும், படைகள் நடமாட்டம் வழக்கமான இராணுவக் காவல் ரோந்து என்றும் துணைப் பாதுகாப்பு அமைச்சர் கூறினார்.

## ஐ. நா. விமானத்தடையை ஜோர்தானும் கடைப்பிடிக்கும்

(அம்மான்)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை விதித்த விமானப் போக்குவரத்துத் தடையை தாங்களும் முழுமையாகக் கடைப்பிடிக்கப் போவதாக ஜோர்தான் நேற்று முன்தினம் அறிவித்தது. ஈராக், குவைத் ஆகிய நாடுகளிலிருந்து விமானங்கள் வரவோ - செல்லவோ ஐ. நா. தீர்மானம் தடைவிதிக்கிறது. ஆனால் மனிதாபிமான அடிப்படையில் விமானங்களை அனுமதிக்க முடியும்; இது பயணிகள் விமானங்களையும் பாதிக்காது.

ஈராக்குடன் விமானப் போக்குவரத்து நடத்தும் ஒரே நாடான ஜோர்தானுக்குவிமானங்கள் தொடர்ந்து சென்று வருகின்றன. ஈராக்குடனான போக்குவரத்து தொடர்புகள் தடைகளை மீறாத வகையில் தொடர்ந்துபராமரிக்க ஜோர்தானியர்கள் விரும்புவதாக அம்மானிலுள்ள பி. பி. சி. முகவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## பாகிஸ்தான் அரசியல் நெருக்கடி! பேஷாவர் நீதிமன்றம் தீர்ப்பு!!

பாகிஸ்தானில் வடமேற்கு எல்லைமாகாணத்தில் சென்ற மாதம் சட்ட மன்றம் கலைக்கப்பட்டது சட்ட விரோதமானது என்று பேஷாவர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. இந்தத் தீர்ப்பின் காரணமாக ஏனைய மாகாண சட்டமன்றங்களும் மீண்டும் பதவிக்கு வரும் வாய்ப்புகள் இருப்பதாக பெனாசிர் சார்பில் ஆஜராகும் வழக்கறிஞர்கள் கூறியுள்ளனர். பேஷாவர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து வழக்குத் தொடரப் போவதாக இடைக்கால அரசின் அரசுத் தலைவரொருவர் கூறியுள்ளார்.

### கோட்டையில் கொடியேற்றியதன் மூலம்

# இலட்சிய வெற்றியைத்தழுவத் தொடங்கிவிட்டோம்

( வடமராட்சி )

''திலீபனின் கனவை கோட்டையிலே கொடி பறக்கவிட்டதன் மூலம் நனவாக்கி விட்டோம். இதன் மூலம் எமது இலட்சியத்தின் வெற்றியைத் தழுவத் தொடங்கி விட்டோம். இதன் முழுமையான பயனை வெகுவிரைவில் அடைய வேண்டுமேயாயிருந்தால் அனைவரும் அணிதிரள வேண்டும்.''

இவ்வாறு வடமராட்சியில் நடைபெற்ற தியாகி திலீபனின் மூன்றாம் ஆண்டு இறுதி நாள் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. சூசை பேசினார்.

இவ்வைபவத்தில் வடமராட்சி கட்சியமைப்பாளர் திரு. அரசண்ணா தலைமை வகித்தார். இவ்வைபவத்தில் கவிஞர் மு. வே. யோ.வாஞ்சிநாதன் பேசுகையில்;

''இந்த மண்ணின் விடிவிற்காக அளப்பெரும் தியாகங்களை செய்துகொண்டிருக்கும் தியாகிகளின் வரிசையில் தியாகி திலீபனும் முக்கியமானவர். ஆயுதம் தரித்த ஒரு போராளியினால் அஹிம்சை வழியில் போராட முடியுமென்பதனை உலக அரங்கிற்கு எடுத்து இயம்பியதோடு பாரத- இலங்கை அரசுகளின் முகமூடிகளை உலக அரங்கிற்கு எடுத்து இயம்பியவர்.'' என்றார்.

இவ்வைபவத்தில் கரவெட்டி வட்டவை அமைப்பாளர் குணபால் பேசுகையில் எமது போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டவர்களை விட பார்வையாளர்களாக இருந்தவர்களே பெருமளவில் மரணமடைந்துள்ளனர். இவர்களிலும் கணிசமான அளவினர் இளைஞர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் போராட்டத்தில் பங்கெடுத்து கொண்டிருந்தால் எமது இலட்சியத்தில் மேலும் பல படிகளை முன்னேறி இருக்கலாம் என்றார்.

இவ்வைபவத்தில் மேலும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர் (18

### பிரேமதாசாவுக்கு பிரசைகள்குழு கடிதம்

# குடிமக்கள் இலக்குகள் மீது விமானக் குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

சாதாரண அப்பாவிக் குடிமக்களின் இடங்களைக் குறிபார்த்து பீரங்கித் தாக்குதல், ஷெல் தாக்குதல், வான்தாக்குதல் ஆகியன யாழ் குடாநாட்டில்தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றன. பகலில் நடக்கும் தாக்குதல்களைத் தொடர்ந்தாற்போல் இரவு நடுநிசியிலும் தாக்குதல்கள் நடாத்தப்படுவதோடு, அத்தாக்குதல்கள் அதிகாலை மட்டும் தொடர்வது ஒரு புதிய அம்சமாகும்.

இவ்வாறு யாழ். பிரசைகள் குழு ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ்ப்பாணத்திலுள்ள வங்கிகள் கடந்த மூன்று மாத காலமாகச் செயற்படாததினால் பணப்புழக்கம் தடைப்பட்டுள்ளது. ஆகவே யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் ஐந்து வங்கிகளுக்குமாக வாராந்தம் மொத்தம் ஒரு கோடிரூபா அனுப்பும் படியும் கோரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்குமெழுகுவர்த்திகள், உலர் மின் கலங்கள் வருவது தடுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இத்தடையை நீக்கி இப் பொருட்கள் வீட்டுப் பாவனையாளர்களுக்கும் கிடைக்கச் செய்யவும், இலவச நிவாரணப் பொருட்கள் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் கிடைக்கச் செய்ய ஆவன செய்யும்படியும் கோரப்பட்டுள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் வெளிநாடுகளிடமிருந்து பணமாகப் பெறப்பட்டுள்ளது.

ஆனால் இந்த உதவி எந்த வகையிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே பண உதவியை யாழ்ப்பாணத்தில் உள்ள அரசசார்பற்ற ஸ்தாபனங்களால் சம்பந்தப்பட்ட தூதரகங்களுடன் சேர்ந்து கையாளவகை செய்யவேண்டும்.

இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வீரமரணம்

காவல் கடமையில் இருந்த அருள் (வேலுப்பிள்ளை சிவகுமாரன்) என்ற வீரவேங்கை வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார். இவர் மருதோடை நெடுங்கேணியைச் சேர்ந்தவர். இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத் தெரிவித்துள்ளனர். (க)

## நான்கு மாதங்கள் சம்பளம் இல்லை

கொழும்பில் தலைமைக் காரியாலயத்தைக்கொண்டு செயற்பட்டுவரும் யாழ். மாவட்டக் கடற்றொழில் விரிவாக்க அலுவலக ஊழியர்களுக்கு கடந்த நான்குமாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை எனயாழ். பிராந்திய பணிமனையைச் சேர்ந்த ஊழியர் ஒருவர் எமது நிருபருக்கு தெரிவித்துள்ளார்.

கடந்த நான்கு மாத வேதனமும் இன்று வரை தலைமை அலுவலகத்திலிருந்து கிடைக்காததால் இந்த அலுவலகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் பெரும் கஷ்டத்தின் மத்தியில் இருப்பதாகக் கூறியுள்ளார்.

### பருத்தித்துறை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி).

மேற்கொண்டு வருகிறது இதற்கு 55,000 ரூபா செலவாகும் எனவும் இவ்வேலை முடிவடைந்ததும் இக்களஞ்சிய சாலையில் சுமார் பன்னிரண்டாயிரம் மெற்றிக் தொன் சரக்குகளை சேமித்து வைக்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால்எதிர்வரும் மழைகாலத்தில்இக்களஞ்சியத்தில் சரக்குகளைப் பழுதடையாமல் பாதுகாக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### பாரம் தூக்கி திருத்தம்

பருத்தித்துறை துறைமுகத்தில் பழுதடைந்த நிலையில் இருந்த பாரம் தூக்கி தற்போது திருத்தப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் இங்கு வந்த கப்பல்களில் இருந்து சரக்குகள்இறக்கும்வேலைகள் மந்தகதியிலேயே நடைபெற்று வந்துள்ளது. இந்த பாரம் தூக்கி சீராக இயங்கத் தொடங்கியதும் சரக்குகள் இறக்கும் வேலைகளை துரிதமாக மேற்கொள்ள முடியும். (க)

### பத்திரிகை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத் தாக்குதலின்போது பத்திரிகைக் காரியாலயத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பத்மநாதன் (வயது 60) மரணமடைந்தார். ஏ. சுகிர்தராஜன்(துரைவயது 38) யோ. ஜெயந்தன் ( வயது 26) ஆகிய இரு ஊழியர்களும், காரியாலயத்திற்கு வேறு விடயமாக வந்திருந்த சூரியகுமார் (வயது 36) ஆகியோரும் படுகாயம் அடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இத் தாக்குதலின்போது பத்திரிகைக் காரியாலயத்திற்கு பின்னால் இருந்த இரு வீடுகளும் சேதமடைந்தன.

யாழ். நகரில் இயங்கிய பத்திரிகைக் காரியாலயங்கள் மீது கடந்த காலங்களிலும் அரச படைகள் தமது கைவரிசையைக் காட்டியமை குறிப்பிடத்தக்கது. 1981இல் ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் சிறிலங்கா அரச படையால் தீயிடப்பட்டது. 1987 இல் இந்திய இராணுவத்தால் ஈழமுரசு, முரசொலிக் காரியாலயங்கள் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டதும் தெரிந்ததே.

## செல்வராசா வீதி திறப்பு

கட்டுவனில் சிறிலங்கா இராணுவப் படையுடனான மோதலில் கடந்த 27 8 90 இல் வீர மரணமடைந்த மேஜர் செல்வராசா மாஸ்டர் அவர்களின் ஞாபகார்த்த வீதி திறப்பு வைபவம் இன்று கோண்டாவிலில் நடைபெறும்

கோண்டாவில் மேற்கு மக்கள் இணைந்து கோண்டாவில் மேற்கில் உள்ள முத்தட்டி வீதிக்கு மேஜர் செல்வராசா மாஸ்டர் ஞாபகார்த்த வீதி என பெயரிட்டு திறந்து வைக்கும் வைபவம் இன்று இரவு ஏழு மணிக்கு நடைபெறும். இவ் வைபவத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள். (க)

### வெளிநாட்டவருக்கான

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாக்தாத்தில் உள்ள அமெரிக்க தூதரங்களில் தூதரக அதிகாரிகள் தவிர்ந்த வேறு யாரையாவது வைத்திருக்கக் கூடாது எனவும் அவ்வாறு வைத்திருந்தால் அவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்படும் எனவும் ஈராக் அறிவித்துள்ளது.அதேவேளை ஈராக்குவைத்தில் உள்ளவர்கள் எவரும் வெளிநாட்டவர்களை வீடுகளில் வைத்திருக்கக் கூடாது எனவும் ஈராக் கடுமையான உத்தரவிட்டிருக்கின்றது.

### யாழ் நகரில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ததைக் காணக்கூடியதாக இருந்தது.

### உதவிப் பொதிகள்

கடந்த நான்கு மாதங்களாக கோட்டையில் யுத்தம் தொடங்கியதிலிருந்து இராணுவத்திற்கு உதவியாக அவ்ரோ விமானங்களால்போடப்பட்ட சாக்குப் பொதிகளும் உணவுப் பொட்டலங்களும் முற்றவெளியில் பரவலாகக் கிடக்கின்றன. சில பொதிகளைக் காகங்கள் கொத்திக் கிளறிய காட்சியையும் காணக் கூடியதாக இருந்தது. முற்றவெளியில் புலிகளால் பயன்படுத்தப்பட்ட புல்டோசர்கள் மண்மூடை அடுக்கிய நிலையில் கைவிடப்பட்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

### இரண்டு நாட்கள் எடுக்கும்

கோட்டை முகாமினுள்ளே இராணுவத்தால் வைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றி இந்தக் கோட்டையை மக்களின் பார்வைக்கு விடுவதானால் இரண்டு நாட்களுக்கு மேல் எடுக்கலாமென கோட்டை வாயிலில்நின்ற போராளிகள் கூறினர். அதுவரை மக்கள் பொறுமையுடன் ஒத்துழைக்க வேண்டுமென அவர்கள் மக்களை வேண்டிக்கொண்டனர்.

### கடற்கரையில் பிணங்கள்

கோட்டையை அண்டிய பண்ணை கடற்கரைப் பகுதியில் இன்னும் பல இராணுவத்தினரின் சடலங்கள் கிடக்கின்றது. இந்த சடலங்களிலிருந்து துர்நாற்றம் வீசியவண்ணம் இருந்தது. இவற்றை காகங்கள் கொத்தி ருசிபார்த்துக்கொண்டிருக்கின்றன.

### கோபுரத்தில் புலிக்கொடி

கோட்டைமுகாம் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து பெரிய புலிக்கொடி ஒன்று தொலைத்தொடர்பு திணைக்கள கோபுரத்தின் உச்சியில் ஆடி அசைந்தவண்ணம் உள்ளது. இந்த தொலைத்தொடர்பு திணைக்களக் கட்டடமும் கடுமையான குண்டுவீச்சுக்கு இலக்காகி இருந்ததை அதன் சேதங்கள் வெளிக்காட்டிக் கொண்டுள்ளது.

### முல்லையில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாக அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் வைத்து மக்கள் மலர் அஞ்சலிகளும் பிரார்த்தனைகளும் செய்தனர்.

புதுக்குடியிருப்பில் திலீபனின் உருவப் படத்துடன் மாபெரும் ஊர்வலமும் முடிவில் பொதுக்கூட்டமும் இடம் பெற்றது. இதில் சிற்றூர், வட்ட அவைகளின்உறுப்பினர்கள்உட்பட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்களும்கலந்துகொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள். இங்கு சில கலைநிகழ்ச்சிகளும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை கலாசாரப் பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது.

ஒட்டிசுட்டானில் திலீபனின் உருவப்படம் மிகச்சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட மேடையில் வைத்து அதன் முன்றலில் நூற்றுக்கணக்கான மக்கள் அடையாள உண்ணாவிரதம் இருந்தனர். தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

மாங்குளத்தில் ஒலுமடு, கறுப்பட்டை,முறிப்பு போன்ற பகுதிகளிலும்திலீபனின் நினைவுப் பந்தல்களும், அஞ்சலி நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

### கோட்டையில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைலாசபதி கலையரங்கில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

மாலை 4.00 மணிக்குஇவர்களின் உடல்கள் காங்கேசன் துறை வீதி, ஆஸ்பத்திரி வீதி, முனீஸ்வரன் வீதி ஆகியவற்றின் ஊடாக ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு தற்பொழுது தமிழர் வசமுள்ள யாழ். கோட்டையின் வட கிழக்குப்புறமாக விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் தகனக்கிரியை செய்யப்படும்.

கொடியவர் கொத்தளம், பகைவனின் பாசறையாம் யாழ். கோட்டையை மீட்கவும், தமிழ் மண்ணையும், மக்களையும் காக்கவும் தம் உயிர்ஈந்துகளத்தில் வீரமரணமடைந்த வீரவேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்தவும், இறுதிச்சடங்கில் பங்கேற்கவும் தமிழீழ மக்கள் அனைவரையும் திரண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

---

## மரண அறிவித்தல்

### திருமதி அக்னஸ் தம்பையா

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக்கொண்டவருமான, திரு நிக்கலஸ் தம்பையாவின் மனைவி அக்னஸ்தம்பையா 27 9 90இல் காலமானார். இவர் பீற்றர்திசநாயகத்தின் தாயாரும், காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து, மனுவேற்பிள்ளை பேதுருப்பிள்ளை, முத்தையா நல்லையா, ஞானம்மா மற்றும் திருமதி ஞானப்பு பஸ்தியாம்பிள்ளை, திருமதி திரேசம்மா, சவிரிமுத்து, திரு. பெனடிக்ற் ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் 27 9 90 மாலை 4.00 மணியளவில் யாழ். கொஞ் சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது என்பதை அறியத்தருகின்றோம். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி திரேசர்மா சவிரிமுத்து
(செல்லம்)

(R/668)

---

## மரண அறிவித்தல்

### திரு. பொன்னம்பலம் பத்மநாதன்

(உதயன் –அர்ச்சுனா விநியோகப்பகுதி ஊழியர்)

பொன்னம்பலம் பத்மநாதன் (உதயன் -அர்ச்சுனா விநியோகப்பகுதி ஊழியர்) நேற்று (27 - 09 - 90) அகாலமரணமானார். இவர் மோகனவல்லியின் (ஆசிரியை கீரிமலை நகுலேஸ்வரி ம.வி.) அன்புக் கணவரும், சிவகுமார், சுரேஸ்குமார், விமலினி, கணேஸ்குமார், வினிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாநந்தன், திருமதி பத்மநாதன், திருமதி மதனசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடராசா, கவிமுத்துமணி, சிவநேசன், திருஞானசம்பந்தர் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மாரீசன் கூடல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

மாரீசன் கூடல்
இளவாலை.

தகவல்:
மூ.சிவநேசன் (மைத்துனர்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது